முருகப்பெருமான் துணை

**மகான் முத்தானந்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.01.2023, செவ்வாய்கிழமை

1. ஞானக்கடலே அரங்கா போற்றி
ஞானயுகம் படைக்க வேண்டி
ஞானச்சுடரேற்றி அருளும் குருவே
ஞான தேசிகனே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது சிலை திங்கள்
குறைவிலா இருபானாற்திகதி குஜன்வாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 26 ம் நாள் 10.01.2023, செவ்வாய்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசிதனை
தேசிகனுக்கு முத்தானந்தர் யானும்
3. யானும் உலகோர் நலம்பெறஉரைப்பேன்
உண்மை வழிகாட்டும் அரங்கன்
ஞானமே கலியிடரை வெல்லும் வல்ல
ஞானபண்டிதன் அருளும் வழிகள் ஆகும்
4. ஆகவே சன்மார்க்கம் தனை
அனைவரும் வேதமாக ஏற்று
மகான் அரங்கனின் கரம்பட
மகாமந்திர தீட்சை ஏற்று
5. ஏற்றுமே செபதப பலமுடன்
இயன்ற அன்னதானம் துவக்க
ஆற்றல்தானும் வரமாகக் கூடி
அனுகிடும் பரிபூரண ஞானபலமும்
6. பலமுற பரிபக்குவம் அதிநிலை
பண்பான நிலைகளும் கூடி
சலனமான மும்மலக் குற்றங்கள்
சகலதும் விலகி ஓடியே
7. ஓடியே அமைதி நற்சிந்தை
ஓங்கார மகிமை தெளிவுகூடி
தேடிவரும் குருவருள் திருவருள்
தெய்வ அனுகூலமாகப் பெருகி
8. பெருகியே பேரானந்த கதி
பேராசான் அரங்கன் ஆசிபட
வருமுலகில் உலகமக்கள் தனக்கு
வரமாகி வலிய சித்திகள் கூடி
9. கூடியே நன்மைகள் தானும்
குழப்பமின்றி அடுக்கடுக்காய் நிறைவேறி
தடையின்றி தனதேட்டு வளம்
தரணியில் பொருள் வளமாகக்கூடி

10. கூடியே அளவிலா தருமமும்
குறைவிலா சேவைகளுமாகி
ஈடேறும் ஞானவான்கள் நிறைந்த
இணையிலா ஞானத்தலைமையுமாக

11. ஆகவே மாற்றம் கண்டு
அரங்கனால் ஞான ஆட்சி
செகமே கண்டு சிறப்புறும்
செப்பிவந்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–